சிறுவர்

# அமுதம்

**19.2.1996**

கிண்ணம்: **7**

எண்ணம்: **2**




## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

## KINDER LITERARISCHES MAGAZIN

## சூரியக் குடும்பம்.

நாம் வாழும் பூமி சூரியக் குடும்பத்தைச் சேர்ந்தது. நாம் வாழும் சூரியக் குடும்பத்தில் ஒன்பது கோள்கள்களும் உப கோள்களும் (சந்திரன்கள்) உள. சூரியன் மட்டும் ஒரு நட்சத்திரமாகும். நட்சத்திரம் என்றால் ஒளி உடையது. கோள் என்றால் ஒளி இல்லாதது. கோள்கள் சூரியனிடம் இருந்தே ஒளியைப் பெறுகின்றன. இச் சூரியக் குடும்பத்தில் புதன், வெள்ளி, புவி, செவ்வாய், வியாழன், சனி,உரனஸ்(Uranus)நெப்ரியூன்,(Neptun) புளுட்டோ,(Pluto) என்பன ஆகும். இக்கோள்கள் யாவும் சூரியனை ஒரு நீள்வட்டப் பாதையில் சுற்றி வருகின்றன. இக்குடும்பத்தில் மிகச்சிறிய கோள் புளுட்டோ. மிகப் பெரியது வியாழன். உயிரினங்கள் வாழும் கோள் பூமி. புவியைச் சுற்றி காற்று மண்டலம் இருக்கின்றது. அத்துடன் நீரும் இருப்பதனால் உயிரினங்கள் வாழுகின்றன.

புதன், வெள்ளி ஆகிய இருகோள்களுக்கும் சந்திரன்கள் இல்லை. புவிக்கு ஒரு சந்திரன் மட்டும் உளது. கோள்கள் எப்படிச் சூரியனைச் சுற்றி வருகின்றனவோ அப்படியே சந்திரன்களும் கோள்களைச் சுற்றி வருகின்றன. செவ்வாய்க்கு 2, வியாழனுக்கு 16, சனிக்கு 21, யுரனஸ் 15, நெப்ரியூன் 8, புளுட்டோ 1, உடையன.




கோள்கள் சூரியனைச் சுற்றிவர எடுக்கும் நாட்கள்:

| | | |
|---|---|---|
| Merkur | புதன் | 88 புவிநாட்கள். |
| Venus | வெள்ளி | 225 புவிநாட்கள். |
| Erde | புவி | 365 நாட்களும் 6மணி. |
| Mars | செவ்வாய் | 2 புவிவருடங்கள். |
| Jupiter | வியாழன் | 12 புவிவருடங்கள். |
| Saturn | சனி | 29 புவிவருடங்கள். |
| Uranus | யுரனஸ் | 84 புவிவருடங்கள். |
| Neptun | நெப்ரியூன் | 165 புவிவருடங்கள். |
| Pluto | புளுட்டோ | 250 புவிவருடங்கள். |

(புவி நாள் என்பது 24 மணித்தியாலங்களைக் கொண்ட ஒரு பகலும் இரவும் ஆகும்).

## பங்காள தேசம்




தென் ஆசியா நாடுகளில் பங்காள தேசமும் ஒன்று. இந்தியாவின் கிழக்கே அமைந்துளது. இந் நாட்டிலும் முஸ்லீம்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். இந்நாட்டின் நிலப்பரப்பு 143,998 சதுர கிலோ மீற்றர். இங்கு வாழும் மக்கள் தொகை 116,601,000. இதன் தலைநகரம் டாக்கா. இந் நாட்டின் நாணயத்தின் பெயர் ராகா (Taka).

இங்கு பேசப்படும் மொழி வங்காளம் ஆகும். இங்குள்ள மக்கள் வழிபடும் சமயங்கள் இந்துசமயம் 14வீதத்தினர் இஸ்லாம் சமயம் 85 வீதத்தினர். இங்கு வாழும் இனங்கள் வங்காளி இனம், பீகார் இனம் என்பன.

இந் நாடு ஒரு கழிமுகப் பிரதேசம் ஆகும். ஆறுகள் கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது. இது நெதர்லாந்தைப்(Holland) போல தாழ்வான நிலத்தில் அமைந்துளது. ஆறுகள் கடலுடன் கலக்குமிடத்தில் இருப்பதால் இங்கு வெள்ளப் பெருக்கு ஏற்படுவது சாதாரணமாக உளது. அத்துடன் உலகிலே மிகக் கூடிய மழையைப் பெறும் இடமான சீராப்பூஞ்சி இங்கு உளது. இங்கு இந்தியாவில் உற்பத்தியாகும் நதிகளான

கங்கை நதி, பிரமபுத்திரா நதி என்பன கடலுடன் கலக்கின்றன.

இங்கு புடவைத் தொழிற்சாலை, தோற் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை, சீமெந்துத் தொழிற்சாலை, செயற்கைப் பசளைத் தொழிற்சாலை என்பன இருக்கின்றன. இங்கு பயிரிடப்படும் பயிர்கள் அரிசி, தேயிலை, பருப்பு வகைகள், கரும்பு என்பன.

## அவுஸ்ரியா (Austria)




ஜேர்மனிக்கு தெற்கு, தென்கிழக்கு திசைகளிலும் பழைய செக்கோசெலவாக்கியாவுக்குதெற்கேயும் பழைய யூக்கோசெலவாக்கியாவுக்கும் இத்தாலிக்கும் வடக்கே அமைந் துளது. இதன் பரப்பளவு 83,851 சதுர கிலோமீற்றர். இங்கு வாழும் மக்கள் 7,666,000. மக்கள் பேசும் *மொழி* ஜேர்மன் மொழி. இந்நாட்டின் தலைநகரம் **Vienna.** இந்நாட்டு நாணயத்தின் பெயர் **Schilling.** மக்கள் வழிபடும் சமயம் றோமன் கத்தோலிக்கம். இங்கு ஜேர்மனியர்கள், குவாசியர்கள், (Croatian) சொலாவியர்(Slovene) ஆகிய இனங்கள் வாழுகின்றன. இந்நாடு குடியரசு ஆட்சியுடையது.

இந்நாட்டின் முக்கியமான பயிர்கள் தானியங்கள், உருளைக்கிழங்கு, பீற்றுட் கிழங்கு என்பன. இங்கு பிரதான கைத்தொழில்களாக இரும்புருக்கு கைத்தொழில், இயந்திரங்கள் செய்தல், மோட்டார் வண்டி செய்தல், சீமெந்து செய்தல், கடதாசி செய்தல், கண்ணாடிப் பொருட்கள் செய்தல் என்பன.

"பொறுமையும் விடாமுயற்சியும் உள்ளவர்கள் சிரமங்கள் என்னும் மலைகளை மிதித்து சென்று விடுவார்கள்".
-காந்திஜி-

"பறவைக்கு உணவா இல்லை? உலகம் முழுவதும் அதற்குத் திறந்து கிடக்கிறது. உழைப்பைத் தேட முடிந்தவனுக்கு உலகம் முழுவதும் வாய்ப்பு இருக்கிறது."
-சீனப்பழமொழி-

"தவறு செய்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பதை விட அவர்களுக்காக வாதாடுபவர்கள் குற்றவாளிகள் ஆவார்கள்."
-ஷேக்ஸ்பியர்-



# தனதத்தர்

ஒரு கிராமத்தில் தனதத்தர் என்றொரு செல்வர் இருந்தார். அவர் செல்வந்தராக இருந்தபோதும், ஏழைகளுக்கு இரங்கும் நல்ல மனமுள்ளவராக இருந்தார். இதனால் அக்கிராமத்து மக்கள் அவரை மிகவும் மதித்து வாழ்ந்தனர். தனதத்தரின் கௌரவமான வாழ்வைக் கண்டு, அந்த நாட்டு அரசாங்கமும் அவரை அக்கிராமத்தின் தலைவராக அமர்த்திக் கொண்டது. அரசாங்கம் தனக்குக் கொடுத்த பதவியை கௌரவமான முறையிலேயே செயல் படுத்தி வந்தார்.

நீதி கேட்டு வருபவர்கள் எந்த வேளையிலும், தன்னைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்திருந்தார். அக் கிராமத்தில் கணவனை இழந்த இளம் விதவை ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவளுடைய கணவருக்குச் சொந்தமாக சிறிது வயற்காணியும், குளமும் இருந்தது. கோடையானாலும், மாரியானாலும் குளத்தில் நீர் குறைவதில்லை. குளத்து நீரில் தன் வயலியே விவசாயம் செய்து தன் குடும்பத்தைக் காத்து வந்தாள். அவளுடைய

பிள்ளைகளும் தாயுடன், தாய்க்கு உதவியாக வயலில் வேலை செய்வார்கள்.

கோடைகாலத்தில், கிணறுகள் நீர் இல்லாமல் வற்றிவிடும். அவ்வேளையில் குளத்து நீருக்கு மதிப்புக் கூடிவிடும். அயலவர்கள் அவள் பணம் கேட்காவிட்டாலும், பணம் கொடுத்து நீர் எடுத்துச் செல்வார்கள். அதனால் அவள் தன் குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் நடத்திச் சென்றாள். அவளுடைய அடுத்த காணிக்காரர் தன் காணியை அடுத்த கிராமத்தானுக்கு விற்று விட்டார். கேசவன் என்பது அவன் பெயர். அவன் மிகவும் பொல்லாதவன். ஏமாற்றுக்காரன்.

கேசவன் அடுத்த காணிக்காரனாக வந்ததுமே, அந்த விதவைப் பெண்ணுக்குக் கஷ்டகாலமாக இருந்தது. அவளைப் பயமுறுத்தியே காணியில் பெரும்பகுதியை அபகரித்துக் கொண்டான். குளமும் அவனிடம் அகப்பட்டுக் கொண்டது. இதனால் விதவையின் குடும்ப நிலை மிகவும் மோசமானது. அவள் படும் கஷ்டத்தைக் கண்ட அயலவர் இரகசியமாகத் தனதத்தரிடம் சென்று முறையிடும்படி கூறினார்கள். ஒருநாள் இரவில் அவள் தனதத்தரின் வீட்டுக்குச் சென்றாள். அவ்வேளை தனதத்தர் சுகயீனமுற்றிருந்த படியால் வாயில்காப்போன் வீட்டுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

விதவை மன்றாடினாள். சத்தத்தைக் கேட்ட தனதத்தர் மெதுவாக வந்து அவளை உள்ளே அழைத்தார். விஷயத்தைக் கேட்டறிந்தார். அவள் மேல் இரக்கப்பட்டு சிறுதொகைப் பணம் கொடுத்தார். உடல்நிலை தேறியதும், தான் வந்து நேரில் பார்ப்பதாகக் கூறினார். சிலநாட்கள் சென்றன. தனதத்தர் தொல்பொருள் ஆராய்ச்சியாளரைப் போல வேஷமிட்டுக் கொண்டார். நோயுற்று மெலிந்திருந்ததால் அவரை மக்கள் யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

நேராகவே, விதவையின் வயலுக்குச் சென்று குளத்தை நோட்டமிட்டார். அந்நியர் ஒருவர் குளத்தை நோட்டமிடுவதைக் கண்ட கேசவன் குளத்தடிக்கு வந்தான். அவனிடம் "இது உங்கள் குளம் தானே!" என்று கேட்டார். கேசவனும் தன் குளமென்றும், குளத்தைச் சேர்ந்த காணியும் தன்னுடையவை என்று கூறினான். விதவையின் வீட்டைக் காட்டி விசாரித்தார். "பாவம், விதவைக்கு இரக்கப்பட்டுத் தான் நிலம் கொடுத்ததாகக் கேசவன் கூறினான். அங்கு வருவதற்கு முன்பே, அவனைப் பற்றிய முழு விபரத்தையும் தனதத்தர் அறிந்திருந்தார்.


கேசவன் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றவன் என்பதையும் அறிந்திருந்தார். ஆகவே, நியாயம் பேசி அவனிடம் இருந்து எதுவும் பெறமுடியாது என்பதும் அவருக்குத் தெரிந்தது. அதனால் தான் அவன் வாயாலேயே, உண்மையைச் சொல்ல வைக்க விழைந்தார். "கேசவா, இந்தக் குளத்தைச் சுற்றிச் சோழர் காலத்து நாணயங்கள் புதைத்து வைத்திருப்பதாக அறிகின்றோம். ஆகையால் வயல் நிலத்தைத் தோண்டிப் பார்க்க வேண்டும்" என்று கூறினார். வேலையாட்கள் மண்ணைத் தோண்டித் தேடத் தொடங்கினர்.



கேசவனுக்குப் பெரிதும் கவலையாக இருந்தது. முன்பே தெரியாமல் போயிற்றே! தெரிந்திருந்தால் எவ்வளவு இலாபம் சம்பாதித்திருக்கலாம். இனி என்ன செய்வது என்று யோசித்தான். கிராமத்து மக்களுக்கும் பெரிதும் வியப்பாக இருந்தது. எவ்வளவு நாட்கள் தேடியபோதும் எதுவும் கிடைக்கவில்லை. தனதத்தர் கேசவனைப் பார்த்து "எங்களுக்குக் கிடைத்த செய்திகள் உண்மையானவை. புதையலை நீர் கைப்பற்றிக் கொண்டீர். அதனால்தான் புதையல் கைக்கு அகப்படவில்லை. விரைவில் சிறை செல்வதற்கு ஆயத்தமாக இரும்." என்றார். தன்னிடம் எதுவுமே இல்லையென்று கேசவன் கூறியபோதும் தனதத்தர் ஒப்புக் கொள்ளவில்லை.


தான் சிறை செல்ல நேரிடும் என்ற பயத்தில் கேசவன் அவரிடம் குளத்தைச் சுற்றியுள்ள நிலம் தன்னுடையது இல்லையென்றும், அது விதவைப்பெண்ணின் நிலமென்றும் கூறினான். "நீங்கள் சொல்வது உண்மை தானே, வாக்கை மாற்ற மாட்டீரல்லவா?" என்று திரும்பவும் கேட்டார் தனதத்தர். கேசவன் ஒப்புக் கொண்டான். தனதத்தரும் தன் வேஷத்தைக் கலைத்தார். விதவையிடம் காணியை ஒப்படைத்தார். இதனால் தனதத்தரின் பெருமை மேலும் உயர்ந்தது.

# வாகனங்களும் மக்களும்.



மனிதன் மனிதனைத் தூக்கிச் செல்லும் நிலைமாறி மிருகங்களைப் பயன் படுத்தப் பழகிக் கொண்டான். குதிரை, கழுதை, கோவேறுகழுதை, லட்டகம், யானை, கலைமான், எருது, எருமை போன்ற மிருகங்கள் பயன் படுத்தப் பட்டன. இவற்றுள் குதிரை, எருது, கலைமான் போன்றிவ இன்றும் கிராமங்களில் வழக்கில் இருக்கின்றன. வண்டிகளை இழுக்கும் வாகனமாகப் பயன் படுகின்றது. இவற்றுள்ளும் குதிரை மிகவும் முக்கியத்துவம் கொண்டு விளங்குகிறதுயந்திரங்கய் கண்டு பிடிக்கப்படும் வரை குதிரைகள் விரைவாகச் செல்லும் வாகனமாகப் பயன்பட்டன.


பின் நீராவியந்திரங்கள் கண்டு பிடிக்கப் பட்டன. போக்குவரத்துத் துறையின் முன்னேற்றக் காலகட்டம் நீராவியின் ஆற்றலைக் கண்ட பின்பே ஏற்பட்டன. மனிதர்களையும், சாமான்களையும் மிகவும் விரைவாகக் கொண்டு செல்ல நீராவி யந்திரத்தின் கண்டு பிடிப்புக்கள்



உதவியுள்ளன. எவ்வளவு பாரங்களையும் இடத்துக்கிடம் கொண்டு செல்லவும், மனித சக்திகள் விரயமாகாத நிலையும் நீராவியின் ஆற்றலால் ஏற்பட்டன.

கூடுதலான நாடுகளில் (புகையிரத வண்டி) ரெயில்வண்டிகளின் செயல் பாட்டினால் பல சேவைகள் நடைபெறுகின்றன. ஒரு நகரத்தில் இருந்து இன்னொரு நகரத்துக்கும், ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கும் மனிதர்களையும், பொருட்களையும் ஏற்றிச் செல்ல ரெயில்வண்டிகள் உதவுகின்றன. சாதாரணமான கார்கள், பேரூந்துகள் (பஸ், லொறி போன்றவை) போன்ற வாகனங்களை விடவும் ரெயில் வண்டிகள் பாதுகாப்பும் வசதியும் உள்ளவை. இவைக்கான தனி ஓடுபாதைகள் இருப்பதும் ஒரு காரணமாகும்.

யந்திரங்களை இயங்க வைக்க நீராவியின் சக்தியைப் பிரயோசனப் படுத்தத் தொடங்கியதும் புதிய கண்டுபிடிப்புக்களும் தரைப் போக்கு வரத்துகளில் பலவித மாற்றங்கள் ஏற்படலாயின. பொருளாதார முன்னேற்றம் கொண்ட நாடுகளாயினும் சரி, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளாயினும் சரி ரெயில்வண்டிகளின் முக்கியத்துவம் பெருமைக்குரியதே. ஆயினும் படிபடியாக ஏற்பட்ட



விரைவான வளர்ச்சி இப்போது மின்சாரத்தின் சக்தியைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

மின்சாரத்தின் துணை கொண்டு ரெயில்வண்டிகள் இயங்குவதை இப்பொழுது பல இடங்களிலும் காண்கிறோம். நீராவியில் இயங்கும் ரெயில்களை விட வேகமாகவும், வசதியானதாகவும் மின்சார ரெயில்வண்டிகள் (Electric Train) இருக்கின்றன. மேலும் சுற்றுப்புறச்சூழல் அசுத்தப் படாமலும் இவ்வண்டிகள் பாதுகாப்பளிக்கின்றன. மக்கள் தொகை கூடுதலாக உள்ள பெரிய நகரங்களில் மின்சார ரெயில்கள் நிலத்துக்குக் கீழே ஓடும் வாகனமாக இயக்கப் படுகின்றன.


இந்த வேளையில் அந்தரத்தில் (உயரத்தில்) கம்பிகளினால் பிணைக்கப்பட்டு இயங்கும் ரெயில்களும், அதி வேகமாகச் செல்லும் ரெயில்களும் இன்று கண்டு பிடிக்கப் பட்டு விட்டன. சாதாரண நீராவி ரெயிலில் இருந்து எத்தனை வகையான ரெயில்கள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன பார்த்தீர்களா!

— தொடரும் —

## வேலனின் கழுதை

வேலன் என்னும் ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது.

அது வேலனுக்கு மட்டுமே அடக்கமாக நடந்து கொள்ளும்.




மற்றவர்கள் யாராக இருந்தாலும், எந்த மிருகமாக இருந்தாலும் சண்டித்தனம் செய்யும். காலால் உதைத்துத் தள்ளிவிடும். இது அவனுடைய வாடிக்கையாளர்களுக்கும், அவன் கிராமத்தினருக்கும் நன்றாகத் தெரியும். கழுதை இருக்கும் வரை வேலன் யாரிடமும் பயப்படத் தேவையில்லை என்று ஊரிலுள்ளவர்கள் அவனைப் பரிகசிப்பது வழக்கம்.

ஒருநாள் சலவை செய்த துணிகளை உரியவர்களிடம் சேர்ப்பித்து விட்டு வந்து கொண்டிருந்தான். மிகவும் களைப்பாக இருந்தது. அருகில் உள்ள ஆற்றங்கரைக்கு கழுதையை ஓட்டிச் சென்றான். கரையில் இருந்த மரத்தில் கழுதையைக் கட்டிவிட்டுக் ஆற்றில் இறங்குவதற்குச் சென்றான். அதேவேளை விவசாயி ஒருவனும் தனது காளைமாட்டை ஓட்டிக் கொண்டு வந்தான். கழுதை நின்ற அதே மரத்தில் கட்டுவதற்காகச் சென்றான்.

அதைக் கண்ட சலவைத் தொழிலாளி ஆற்றில் இறங்கியவாறே "தம்பி! தம்பி! கழுதை நிற்கும் இடத்தில் மாட்டைக் கட்டாதே. சண்டித்தனக் கழுதை காலால் உதைத்துவிடும். கொஞ்சம் தள்ளி நிற்கும் மரத்தில் கட்டு." என்று எச்சரித்தான். விவசாயி அவன் சொல்லுவதைக் கேட்காமல் அதே மரத்தில் கட்டிவிட்டு ஆற்றை நோக்கி நடந்தான். கழுதை சும்மா இருக்குமா?. பேசாமல் நின்ற காளைமாட்டை தன் காலால் உதைத்துக் காயப்படுத்தி விட்டது.

மாட்டின் சத்தம் கேட்டு இருவருமே திரும்பிப் பார்த்தனர். காளைமாடு கீழே விழுந்து விட்டது. ஓடி வந்து இருவரும் மாட்டை

கைத்தாங்கலாக எழுப்பினார்கள். மாட்டின் பின்னங்கால்களின் ஒன்று பலமாகத் தாக்கப் பட்டதால் நடக்க முடியாமல் கஷ்டப்பட்டது. "சொல்லச் சொல்லக் கேட்காமல் மாட்டை கழுதையோடு கட்டினாயே தம்பி. மெதுவாக மாட்டை ஓட்டிச் செல்லு. வைத்தியரிடம் காட்டி நோவைக் குணப்படுத்து" என்று கூறினான்.



விவசாயி மாட்டைக் குணப்படுத்த நிறையப் பணம் செலவளிக்க வேண்டியிருந்தது. அந்தப் பணத்தை கழுதைக்காரனிடம் பெற்று விட வேண்டுமென்று நினைத்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தான். நீதிமன்றத்துக்கு வரும்படி சலவைத் தொழிலாளிக்கு அறிவித்தல்

வந்தது. சலவைத் தொழிலாளியும் நீதிமன்றத்துக்குச் சென்றான். நீதிபதி அவனைப் பார்த்து "அவருடைய மாட்டை உமது கழுதை காலால் உதைத்ததாமே! அது உண்மைதானே! என்று கேட்டார்.

சலவைத் தொழிலாளி எதுவுமே பேசாமல் ஊமை போல் நடித்தான். காதும் கேட்காத ஊமையைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறீரே?" என்று நீதிபதி மாட்டுக்காரனைப் பார்த்துக் கேட்டார். மாட்டுக்காரன் நீதிபதியைப் பார்த்து "நீதிபதி அவர்களே, சலவைத் தொழிளாளி ஊமையைப் போல் நடிக்கிறார். அன்று மாட்டை நான் மரத்தில் கட்டும் வேளையில், தம்பி! தம்பி! மாட்டை கழுதை நிற்கும் இடத்தில் மாட்டைக் கட்டாதே. சண்டித்தனக் கழுதை. காலால் உதைத்து விடும். கொஞ்சம் தள்ளி நிற்கும் மரத்தில் கட்டு என்று என்னிடம் கூறினாரே." என்று சொன்னான்.

நீதிபதி விவசாயியைப் பார்த்து அவர் சொல்லியதைக் கேட்காமல் நீ தானே கழுதை கட்டிய மரத்தில் கட்டினீர். ஆதலால் சலவைத் தொழிலாளி அதற்கான செலவை ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. என்று தீர்ப்புக் கூறினார்.

Angertaler Str.98
47249 Duisburg
Tel:0203/706480

# "மண்" சஞ்சிகை

## கலை, இலக்கிய, சமூக இருமாத இதழ்

## "MAN" (ERDE) Tamilisches Magazin

### - அறிவித்தல் -

எமது சொந்த நாட்டில் நடந்த, நடக்கின்ற இனக்கலவரங்களில் தாய், தந்தை, உற்றார், உறவினர்களை இழந்து அநாதை இல்லங்களில் அல்லல்ப்பட்டு வருபவர்கள், போரினால் கை, கால் போன்ற அங்கங்களை இழந்தவர்கள், நிரந்தர முடமாக்கப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், அகதிகள் ஆகியோருக்கு உதவும் பொருட்டு "மண்" சஞ்சிகையின் வாசகப் பெருமக்களும், இரக்க சிந்தனை படைத்த அன்பு உள்ளங்களும் மனமுவந்தளித்துவரும் நிதி உதவியினால் 26.9.1991 தொடக்கம் 31.12.95 வரை 19045.35 ஜேர்மன் மார்க்குகளை நேரடியாக அனுப்பிவைத்துள்ளோம். என்பதை சகலருக்கு அறியத்தருகிறோம்.

### யாழ்மாவட்டம்

| | |
|---|---|
| 26.09.91, 18.12.93-அமல அன்னை அன்பகம்-அரியாலை | - 1045.35 |
| 29.02.92, 22.02.94-பரமானந்த அநாதை இல்லம்-வதிரி-கரவெட்டி | - 1000.00 |
| 30.06.92, 31.08.92, 28.10.93, 31.08.94, 28.06.95-<br>செயற்கைக் கால்பொருத்தும் நிலையம் ஜெய்ப்பூர்-யாழ்ப்பாணம் | - 2500.00 |
| 21.11.93, 28.02.95-ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம்-யாழ்ப்பாணம் | - 1500.00 |
| 14.04.93, 12.12.93-அறவழி நிலையம்-சாவகச்சேரி | - 1000.00 |
| 15.08.93-மகேஸ்வரா இல்லம்-மானிப்பாய் | - 500.00 |
| 28.10.93, 02.05.95-சிறிசாரதா ஆச்சிரம்-பருத்தித்துறை | - 1000.00 |
| 29.02.92-துர்க்கா அநாதை இல்லம்-தெல்லிப்பழை | - 500.00 |
| 21.06.93-ஞானசம்பந்தர் இல்லம்-உரும்பிராய் | - 500.00 |
| 14.04.94, 13.10.94-வலுவிழந்தோர் வாழ்வகம்-உடுவில் | - 1000.00 |
| | -10545.35 |

### கிளிநொச்சி மாவட்டம்

| | |
|---|---|
| 31.08.92-குருகுலம்-கிளிநொச்சி | - 500.00 |
| 31.10.93-கருணா[illegible] நிலையம்-உருத்திரபுரம் | - 500.00 |

| | |
|---|---|
| [illegible] | - 500.00 |
| 14.04.93-காந்தி நிலையம்-உருத்திரபுரம் | - 500.00 |
| 22.02.94-தவஜீவனம்-பாத்தன் | - 2000.00 |
| 23.02.93, 20.06.94-ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்கழகம்-கிளிநொச்சி 02.01.95, 20.12.95 | |
| | - 4000.00 |

## திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| 30.05.92-அன்பு இல்லம்-திருகோணமலை | - 500.00 |
| 30.05.92, 28.10.93, 31.10.94-சிறிசண்முகா இல்லம்-திருகோணமலை | - 1500.00 |
| 21.06.93, 22.02.94-சிவானந்தா தபோவனம்-திருகோணமலை | - 1000.00 |
| | - 3000.00 |

## மன்னார் மாவட்டம்

| | |
|---|---|
| 10.12.93-திருக்குடும்ப கன்னியார் மடம்-பேசாலை | - 500.00 |
| 06.07.95-ஆயர் (மறைமாவட்டம்)-மன்னார் | - 500.00 |
| | - 1000.00 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| 12.04.95-இராமகிருஷ்ண மிசன்-மட்டக்களப்பு | - 500.00 |

## மொத்தம் 19045. 35 ஜே. மார்க்

இத்திட்டத்திற்கு நிதி உதவி புரியவிரும்பும் அன்பர்கள் கீழ்க்காணும் வங்கி விபரத்திற்கு உங்கள் அன்பளிப்புகளை அனுப்பி உதவி புரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வங்கிவிபரம்:-

VYRAMUTHU - SIVARAJAH
STADTSPARKASSE - DUISBURG
KONTO - 225000215
BANKZAHL - 35050000

~நன்றி~

ஆசிரியர்
"மனே" சஞ்சிகை
டியூஸ்பேர்க் 1.1.1996

# வினாவிடைப் போட்டி முடிவுகள்

1. உலகின் கூரை என்று வளங்கப்படும் நாடு எது?
தீர்த்தம், பெட்டகம் பந்து. (தீபெத்)

2. 'ஏர்ஜேர்னி' ஆசியாக் கண்டத்திலேயே மிகப் பெரிய குகையாகும். இது அமைந்துள்ள நாடு எது?

மஞ்சள், கிலேசம்,அசிங்கம், பிரயாணம். (மலேசியா)

3. பெண்டுலத்தின் மூலம் கடிகாரத்தை ஓடச்செய்த விஞ்ஞானி யார்?

கத்தி, கிலிபல்லி, முன்யோசனை, அகம், பலிபீடம், மலிவு (கலிலியோகலிலி)

4. உலகிலேயே கூடுதலான பத்திரிகைகள் வரும் நாடு எது?

இஞ்சி, அந்திவானம், திராட்சை, நீர்யானை. (இந்தியா)

5. 1964ம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும், வெள்ளிப் பதக்கங்களையும், பெற்றுக் கொண்ட இரண்டு நாடுகள் எவை?

ஜம்பவான், அய்யா, பாலம், இன்பம், ரம்பம், புஷ்பம், மயானம் (ஜப்பான், ரஷ்யா.)

விடைகளை எழுதியவர்கள்:

| | |
|---|---|
| 1.சிவகரன். | DENEMARK |
| 2.சுஜீனா சண்முகலிங்கம் | CLAUSTHAL |
| *3.தனுஜா மாசிலா | SAARBRÜCKEN |
| 4. மைதிலி மாசிலா | SAARBRÜCKEN |
| 5.சுகீவன் சண்முகலிங்கம் | CLAUSTHAL |
| 6.பிரகாஸ் கந்தவனம் | NORWAY |
| 7.வித்தியா சிவசுப்பிரமணியம | SELM |
| 8.சிவகாந் சிவராஜா | DUISBURG |
| 9.சிவாஸ்கர் சிவராஜா | DUISBURG |
| 10.முகுந்தன் மகேந்திரன் | BERG. GLADBACH |
| 11.ஜெயதீபா இரத்தினசபாபதி | ESCHELBRONN |
| 12.மோகன் இரத்தினசபாபதி | ESCHELBRON |
| 13. கிரிசாந் மனோறஞ்சிதராஜா | MÜNSTER |
| 14.ஜெயசாந் மனோறஞ்சிதராஜா | MÜNSTER |
| 15.நிரோஷினி ஹரிச்சந்திரன் | WILDEMANN |
| 16.றேகா தியாகேஸ்வரன் | DORTMUND |
| 17.மஞ்சுளா சிவசம்பு | LOHMAR |
| 18.சிவதர்சினி சிவராஜா | DUISBURG |

* பரிசு

□□□ மிகவும் புகழ் பெற்ற வானியல் நிபுணர்களில் ஒருவர் வடகோ பிராக். இவரது பெயர் நிலவிலுள்ள மிகப்பெரிய எரிமலைக்கு வைக்கப்பட்டுள்ளது.□□□

"புல்டோக்" என்ற பேருள்ள இந்த எறும்புக் கடியால் இறப்புக் கூட நேரிடுகின்றது□□□.

□□□5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆதிகால மக்கள் குதிரை இறைச்சியை விரும்பிச் சாப்பிட்டார்கள்.□□□

□□□ வடமேற்கு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் காணப்படும் "மொஹெஞ்சதாரோ", ஹரப்பா, மற்றும் ஏனைய வட்டாரங்களில் தொல்பொருள் அகழ்வு மூலம் பல ஊர்களைக் கண்டு பிடித்துள்ளார்கள். கிமு1500 ஆண்டுக்கு முன்பே நாகரீகம் கொண்ட சமுதாயம் ஒன்று இருந்திருக்கின்றதென்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இங்கு காணப்பட்ட கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துகள் இதுவரையில் பொருள் விளங்க முடியவில்லை. இங்கு காணப்படும் எழுத்துகள் எகிப்து, சுமேரியா, பிராமி போன்ற தொடக்ககால எழுத்துகளோடு ஒத்திருக்கவில்லை. ஆராய்ச்சிக்குட்பட்டிருக்கும் இம்மொழி திராவிட மொழியாக இருக்கலாம் என ஆராச்சியாளர் நம்புகிறார்கள். □□□

சில நொடிகள்

1. கொட்டி விட்டால் ஓடும் தேளும் அல்ல, குட்டையிலே கிடக்கும் மீனும் அல்ல

2. அங்கே சிலுக்குவான் இங்கே பிலுக்குவான் கதவு ஓரத்தில் ஒட்டிக் கொள்வான்.

3. சிங்காரக் கட்டிடத்தில் சங்கீதக் கச்சேரி அருகே போனால் குத்து விழும்.

4. காலை மாலை நெட்டை, பகல் நேரம் குட்டை.

5. காணும் இடமெல்லாம் முள் கால்களில் குத்த மாட்டாள்.

விடைகள்
1.தண்ணீர் 2.விளக்குமாறு 3.தேன்கூடு 4.நிழல் 5.கடிகாரம்

அனுப்பியவர்: கிரிசாந் மனோரஞ்சிதராஜா
Münster

□□□ மிகவும் அபாயகரமான எறும்புகள் டாஸ்மேனியா அவுஸ்ரேலியா போன்ற இடங்களில் காணப்படுகின்றன'

# அதிசய மோதிரம்



நிலா இருக்கும் இடத்தை அறிந்ததும் சித்திராவும் கௌதமும் அப்போதே அங்கு சென்று அவளை மீட்க எண்ணினார்கள்.

ஆனால் ரமா: "இன்னும் சில நேரங்களில் இருட்டி விடும். இருட்டு வேளையில் நாங்கள் குகைக்குப் போய் நிலாவை மீட்பது சுலபமில்லை. திருடர்களால் எங்களை சுலபமாகப் பிடித்து விட முடியும்! ஆகவே நாளைக்குப் போவதே நல்லது" என்று சொன்னாள்.

"உனக்குப் பயமாக இருந்தால் இங்கேயே இரு! நானும் கௌதமும் போய் நிலாவை மீட்டு வருகிறோம்" என்றாள் சித்திரா.

"சித்திரா சொல்லுவதே சரி! நானும் சித்திராவும் குகைக்குப் போய் நிலாவை மீட்டு வருகின்றோம், நீ வேண்டுமானால் வா இல்லையென்றால் வராதே!" என்று கௌதமும் சொன்னான்.

"அப்படியானால் நீங்கள் இருவரும் கட்டாயம் போய்த்தான் தீருவீர்களா?" கேட்டாள் ரமா.

ஆமாம் என்பது போல் கௌதமும் சித்திராவும் தலையாட்டவே, ரமா: "வேறு வழி நானும் வருகிறேன" என ஒத்துக் கொண்டாள்.

அவர்களைப் பார்த்து முனிவர் "அப்படியானால் கவனமாக இருங்கள். தவறி வேறு எங்கும் போகாதீர்கள், இங்கிருந்து வலது பக்கமாகவே போங்கள். சற்றுத் தூரம் சென்றதும் மூன்று பெரிய மரங்கள் தெரியும். அவை பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாக இருக்கும். அம்மரங்களுக்குப் பின்னிருக்கும் குகையில்தான் நிலாவை அடைத்து வைத்திருக்கிறார்கள்" எனக் கூறினார்.

பின்பு மூவரும் முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு குகையை நோக்கி நடந்தனர்.

திடீரென கௌதம்: "ரமா! உனது தங்கையைப் பிடித்து வைத்திருப்பவர்களிடம் கட்டாயம் துப்பாக்கி, கத்தியெல்லாம் இருக்கும். ஆகவே உனது நாங்களும் மந்திர மோதிரத்தால் ஆயுதம் வைத்திருப்பதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்" என்றான்.

"ஆம்! ஆம் மாவீரன் நெப்போலியன் அல்லவா! இவர் நினைக்கிறாராம்! நினைப்பு!" என்று சொல்லிச் சிரித்தாள் சித்திரா.

"என்னடி சிரிப்பு? நான் சொன்னதில் ஏதாவது தவறு இருந்தால் சொல் பார்ப்போம்!" எனக் கேட்டான் கோபமாகக் கௌதம்.

உடனே ரமா "ஆம் இருக்கிறது நாங்கள் நிலாவைக் காப்பாற்றித் திருடர்களைப் போலீஸிடம் ஒப்படைக்கப் போகிறோமே தவிர மூன்றாவது உலகயுத்தத்தை நடத்தவில்லையே. வன்முறையில்லாமல் நிலாவைக் காப்பாற்றுவதல்லவா வீரம்! அதை விட்டுவிட்டுத் துப்பாக்கி, கத்தி...... தேவைதானா?" என்றாள்.



"அதுமட்டுமில்லாமல் துப்பாக்கியைக் கையில் கொடுத்து விட்டால் சுட்டுத்தள்ளி விடுவாயா?" இது சித்திரா.

"சரி, சரி, ஆயுதம் வேண்டாம், நீங்கள் இருவரும் வாயைப் பொத்திக் கொண்டாலே போதும்! சரியான வாயாடிகள் மட்டும்" சலித்துக் கொண்டான் கௌதம்.

-தொடரும்-

"மௌனம் மிகவும் வலிமை வாய்ந்தது. சில வேளைகளில் அது சம்மதம் அளிக்கும். சில வேளைகளில் கண்டனம் தெரிவிக்கும். சில வேளைகளில் பழிக்கும். சில வேளைகளில் பணிந்து கொள்ளும். இவ்வளவு பெருமையும் மௌனத்துக்கு உண்டு."

— லா ரோஷ் புக்கோ —

"அமைதியான மனமே உங்களின் பலம். அதுவே பல வெற்றிகளையும் கொடுக்கும்."

— விவேகானந்தர் —

"மனோதைரியத்தை இழந்தவன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்து விடுகிறான்"

— கதே —

"மேக இருளுக்குப் பின் ஒளி உண்டு"

— ஹொமவி ரொட்டி —

"இயற்கை மனிதனுக்கு இரண்டு கண்களையும், இரண்டு காதுகளையும் கொடுத்திருக்கிறான். ஆனால் வாய் ஒன்றைத் தான் கொடுத்திருக்கிறான். பேசுவதை விட பார்ப்பதும், கேட்பதும் தான் கூடுதலாக இருக்க வேண்டும்"

— சோக்கிரடீஸ் —

# செடியும் சின்னத்தம்பியும்

சின்னச் செடியை நட்டு நான்
தினமும் தண்ணீர் ஊற்றினேன்
நன்கு செடியும் வளர்ந்தது
நான்கு மீற்றர் உயரந்தது

சின்னத் தம்பி சேகரும்
செடி போல் வளரவில்லையே?
இன்னும் குள்ளமாகவே
இருக்கலாமோ? ஆதலால்,

சிறுவன் அவனைத் தினமுமே
செடியின் அருகில் நிறுத்தியே
தண்ணீர் விட்டேன் நாலுநாள்
சளி பிடித்துக் கொண்டதே!

-அழ. வள்ளியம்மா -



<u>சொற்களைக் கண்டு பிடியுங்கள்</u>

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி | றி | து | அ | ம் | ர | ம | ல | ஆ | ம் |
| றி | ப | ய | றி | ஒ | கு | தி | ப | ல | ச |
| ய | பை | ர | வி | கௌ | சா | ர | ம் | ழி | கா |
| த | ப | ம் | ம் | வி | யா | ம் | த | த் | ர |
| க | தி | த் | ப | அ | கு | ப | வ | ம் | பி |
| ம் | ம் | வி | ள் | வை | டி | வி | ண் | ண | ம் |
| ப | ர | தை | ஈ | ண் | கு | த் | ம | ச | க |
| ண் | தி | ட | ஒ | ணி | னை | தி | ட் | ட | ம் |
| வா | ந் | தி | கு | ளா | பா | ர | ம் | ல | ப |
| ம் | கு | ந் | ம | ம் | ச | ம் | ப | ன | ம் |

முடிவு திகதி: 1.4.96

#போட்டிகளில் கலந்து கொண்டவர்களும், ஆக்கங்களை எழுதிவரும் ஆக்கதாரர்களும் இதுவரை தங்களுக்குக் கிடைத்துள்ள பரிசுப் புத்தகங்களின் பெயர்களை இம்முறை அமுதத்திற்கு எழுதி அனுப்பும்போது மறக்காமல் குறிப்பிடவும்.

#சிறுவர் அமுதத்தில் புதிய மாற்றங்கள் தேவையென நீங்கள் கருதினால், அவைகளை எழுதி அனுப்பவும்.

#நீங்கள் எங்களுக்கு அனுப்பும் ஒவ்வொரு ஒற்றையிலும், உங்களது முழுப்பெயரும் விலாசமும் எழு[illegible] அவசியம்!

# அரசனின் தந்திரம்

முகலாயச் அரசனான ஔரங்கசீப் பல மனைவியரை மணம் செய்திருந்தான். பல மக்களும் இருந்தனர். வாரிசுக்குரியவனான மகன் நாட்டை நினைக்காமல் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்தான். தந்தைக்கும் மகனுக்குமிடையில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டது. தந்தைக்குத் துரோகம் செய்வதாக நினைத்து நாட்டுக்கே துரோகம் செய்யத் துணிந்தான் மகன்.

பகை அரசர்களிடம் நட்புக் கொண்டான். அவர்களும் அவன் நட்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்தினர். நாட்டின் இராணுவ இரகசியங்கள் பகையரசருக்குத் தெரிய வந்தன. ஔரங்கசீப்பின் ஒற்றர்கள் நாட்டின் இரகசியங்கள் வெளியே போயிருப்பதை அரசரிடம் தெரிவித்தனர். அரசன் தீவிரமாகத் யோசித்தான். ஒற்றர்கள் தீவிரமாக வேலை செய்தனர். கடைசியில் இளவரசனே, அதற்குக் காரணம் என்பதும் தெரிந்தது.

ஔரங்கசீப் மகனுக்குப் பின்வருமாறு கடிதம் ஒன்றை எதினார்.

'மகனே, அவசரமாக எதையும் செய்யாதே. ஏற்கெனவே, உன்னிடம் சொல்லியபடி நீ பணியாற்றி



வருவது மகிழ்ச்சியைத் தருகிறது. பகைவர்களிடம் நட்பாகவே இருப்பதாக நடித்துக் கொள். அவர்களுடைய இராணுவ இரசியங்கள் யாவற்றையும் அறிந்து கொண்டு அடுத்த கட்டத்தை யோசிக்கலாம். அது வரை உன் நிதானத்தைக் கைவிடாதே!'

எழுதிய கடிதத்தை சேவகனிடம் கொடுத்து பகையரசர்களிடமே சிக்க வைத்து விட்டார். நட்புக் கொண்டிருந்த பகையரசர்கள் இளவரசனை அடித்து விரட்டினார்கள். அரசனின் தந்திரம் எப்படிப் பலித்தது பார்த்தீர்களா!!

# சொற்களைக் கண்டு பிடிக்கும் முறை

| இ - வ | வ - இ | மே - கீ | கீ - மே |
|---|---|---|---|
| வித்துவம் | அரவம் | விவசாயம் | வேதியன் |
| பரிசு | மாமா | சாயம் | மரி |
| பரி | மாதிரி | பட்டம் | தம் |
| கூடாரம் | பாறை | படம் | கோன் |
| பம்பரம் | பால் | தரி | குடை |
| பரம் | படை | கடை | பழம் |
| பாதிரி | திரு | கோ | பரம்பரை |
| திரி | திருட்டு | வசு | பத்திரம் |
| மாமா | குடம் | கரை | ரம்பி |
| படை | நாமம் | பகல் | பாலம் |
| பகல் | பரதன் | பா | வெண் |
| பாமதி | தன் | ரதி | வெண்மலை |
| மதி | காலை | பூபதி | மலை |
| கும்பி | வாலி | தில்லை | மகா |
| நாடி | கணி | மண் | மகாநாடு |
| பரண் | கோமதி | மண்வெட்டி | நாடு |
| காவலன் | மதி | வெட்டி | பாரி |
| கதி | | பாடு | கலை |
| மலை | | மணி | வடி |
| கோல் | | பதி | மதி |
| கலி | | மட்டி | கலி |
| வாசற்படி | | வலை | கலிகாலம் |
| படி | | கண் | காலம் |
| | | திரு | |
| | | காலி | |
| | | அம்மா | |
| | | யாத்திரை | |
| | | திரை | |
| | | வாதி | |

எல்லாப் பக்கத்தாலும் வரும் சொற்கள்
பூ, சா, பா, மா, நா, கா, கோ, வா

எழுதியவர்கள்:

| | |
|---|---|
| 1. சிவதர்சினி சிவராஜா | Duisburg |
| 2. மஞ்சுளா சிவசம்பு | Lohmar |
| 3. நிறோஷினி ஹரிச்சந்திரன் | Wildemann |
| 4. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா | Münster |
| 5. மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| 6. கிரிசாந் மனோரஞ்சிதராஜா | Münster |
| 7. ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschelbronn |
| 8. முகுந்தன் மகேந்திரன் | Berg.gladbach |
| 9. பிரகாஸ் கந்தவனம் | Norway |
| 10.சுகீவன் சண்முகலிங்கம் | Clausthal |
| 11.றுஷாணி நிமலகுமார் | Zürich |
| *12.மோகனதாஸ் இராசு | Bremen |
| 13.கௌரியன் சிவானந்தராஜா | Elsdorf |
| 14.அபிராமி பரமேஸ்வரன் | Denemark |
| 15.ஜெயானந்தன் கண்ணன் | Berg.gladbach |
| 16.வித்தியா சிவசுப்பிரமணியம் | Selm |
| 17.சுஜீனா சண்முகலிங்கம் | Clausthal |
| 18கிருஸ்ணானந்தன் கண்ணன் | Berg.gladbach |
| 19.சிவகாந் சிவராஜா | Duisburg |
| 20சிவாஸ்கர் சிவராஜா | Duisburg |
| 21.மைதிலி மாசிலா | Saarbrüchen |
| 22. ஜெயந்தினா | |
| 23.தனுஜா மாசிலா | Saarbrüchen |

* = பரிசு

# வினாவிடைப் போட்டி

1. நீச்சல் போட்டியை ஒரு விளையாட்டாக மாற்றிய நாடு எது?

ஐதிசுரம், பப்பாளி, பாலைவனம், பின்னல்.

2. கடந்த இருபது ஆண்டுகளாக வறுமையிலேயே வாடும் மக்களைக் கொண்ட நாடு எது?

மொட்டு, அஸ்ஸாம், கட்டிடம், பிரிவு, அக்கா.

3. உருளைக் கிழங்கை உலகறியச் செய்த நாடு எது?

ஸடீசம், தளபாடம், தாணியம், அப்பியாசம்.

4. "அல்பாண்" என்பது இந்த நாட்டின் பழைய பெயர். நாடு எது?

பிள்ளை, அரிசி, சுத்தம், நாளம், இனிமை, மயானம்.

5. "நீல இல்லம்" எந்த நாட்டு ஜனாதிபதியின் இல்லம் இப்படி அழைக்கப் படுகின்றது?

தெய்வம், புன்னகை, நன்கொடை, பரிதாபம், நியாயவாதி.

முடிவு திகதி: 1.4.96

# வருங்காலம் நமதாகும்


ஒரு சிறு இலையும் இல்லாமல்
உதிர்ந்து உலந்து போனாலும்
மறு துளிர் துளிர்ப்பை எதிர்பார்த்து
மரமோ மண்ணில் தவமிருக்கும்।

பதியும் கால்கள் சுடுமாறு
படுகை வரட்சி ஆனாலும்
புதிய வெள்ளம் எதிர் பார்த்து
புனித நதியோ பொறுத்திருக்கும்।

அடர் இருளே சூழ்ந்தாலும்
அச்சமூட்டி இருண்டாலும்
கதிரின் ஒளியை எதிர்பார்த்து
கரிய வானம் காத்திருக்கும்।

துன்பம் துயரம் வந்தாலும்
தொடர்ந்து தொல்லை தந்தாலும்
இன்பம் ஒருநாள் வரும் என்று
எண்ணி முயற்சி செய்ய வேண்டும்।

பல்லவன்




**NEKTAR FÜR KINDER**